# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2021–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 6–ஆம் நாள், திங்கட்கிழமை

## அசல் வழக்கு எண் 5/2016

**(CNR No. TNSA–1300–0119–2016)**

ஆனைமுத்து .. வாதி

எதிராக

1. மாணிக்கம்
2. செல்வராஜ் .. பிரதிவாதிகள்

கடந்த 04.01.2016 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 19.08.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. வடிவேல் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. கண்ணன் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகள் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா சொத்தை எவ்வகையிலும் துண்டித்துவிடவோ அல்லது அடைத்துவிடவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>தாவாவின் சுருக்கம் :</u>** வாதியும் 1ம் பிரதிவாதியும் சகோதரர்கள். 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் மகன் ஆவார். அவர்கள் அவரவர் நிலங்களில் வசித்து வருகின்றனர். வாதி மற்றும் 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரான கலிய படையாச்சி அவரது சொத்துக்களைப் பொறுத்து எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 1995–ம் ஆண்டு அவரது மூன்று மகன்களான வாதி, 1–ம் பிரதிவாதி மற்றும் பழனிமுத்து என்பவர்களை விட்டுவிட்டு காலமாகிவிட்டார். மூத்த மகனான பழனிமுத்து அவரது தகப்பனார் காலமாவதற்கு முன்பே கடந்த 1985–ம் ஆண்டு அவரது மனைவி மாதேஸ்வரி, மகள்கள் கலைச்செல்வி, லட்சுமி ஆகியோர்களை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். வாதி மற்றும் 1–ம் பிரதிவாதியின் தாயார் கடந்த 2000–ம் ஆண்டு காலமாகிவிட்டார். பழனிமுத்துவின் வாரிசுகளும், வாதி மற்றும் 1–ம் பிரதிவாதியும் அவர்களது குடும்ப சொத்துக்களை கடந்த 13.09.2001 அன்று மூன்று பாகங்களாக பிரித்துக்கொண்டு ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்து கொண்டார்கள். அதில் பழனிமுத்துவின் வாரிசுகளுக்கு மேற்கில் அமைந்திருந்த சொத்துக்கள் A அட்டவணை சொத்துக்களாகவும், அதற்கு அடுத்து கிழக்கில் அமைந்திருந்த சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு B அட்டவணை சொத்தாகவும், அதற்கும் கிழக்கில் அமைந்துள்ள சொத்துக்கள் வாதிக்கு C அட்டவணை சொத்தாகவும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மூன்று தரப்பினரும் அவரவர் சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகின்றனர். பழனிமுத்துவின் வாரிசுகளுக்கு தனியாக ஒரு மின் இணைப்பு மற்றும் கிணறு மோட்டார் பம்புசெட் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வாதிக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் ஒரு கூட்டு கிணறு மற்றும் 5 எச்.பி திறன் கொண்ட மின் மோட்டார் மற்றும் மின் இணைப்பு எண் 417 கூட்டாக பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிணறு பம்புசெட்டானது வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ள கிழபுற நிலத்தில் சுமார் 13 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது. அக்கூட்டு கிணற்றுக்கு செல்வதற்கு 5 செண்ட் விஸ்தீரண்த்தில் ஒரு பொது வண்டித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி

இருவரும் அவரவர் பாக சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள். வாதியானவர் அவரது நிலங்களுக்கு செல்வதற்கு தாவா மாதிரி வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள பொது வண்டித்தடத்தின் வழியாக தான் செல்ல வேண்டும். அப்பொது வண்டித்தடமானது கிழமேலாக மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு அமைந்துள்ளது. அவ்வண்டித்தடமானது மழை காலங்களில் வாதியின் நிலத்தின் கிழபுறத்தில் அமைந்துள்ள மழையிலிருந்து வெளியேறும் மழைநீரை வெளியேற்றும் ஓடையாகவும் அமைந்துள்ளது. மேற்படி வண்டித்தடமானது வாதியின் பயன்பாட்டுக்காக வேண்டி குறிப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அது வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது, வேறு யாருக்கும் பாத்தியப்பட்டதல்ல. இந்நிலையில் கடந்த 2010ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்படி தாவா வண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு 1–ம் பிரதிவாதி இடையூறு செய்ய ஆரம்பித்தார். அதனால் மல்லியகரை காவல் நிலையத்தில் வாதி கொடுத்த புகாரானது புகார் மனு எண் 2/2010–ஆக பதிவு செய்யப்பட்டது. போலிசார் 1–ம் பிரதிவாதியை விசாரித்து தாவா வண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று அறிவுறுத்தினார்கள். ஆனால் 1ம் பிரதிவாதி மீண்டும் தாவா வண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு இடையூறு செய்ததால் கடந்த 07.01.2011 அன்று கொடுத்த புகாரானது, மனு எண் 5/11–ஆக பதிவு செய்யப்பட்டது. சமீபகாலம் வரை 1ம் பிரதிவாதி போலிசார் அறிவுரையின்படி நடந்து வந்தார். இந்நிலையில் மீண்டும் பிரதிவாதிகள் வாதியிடம் கூட்டு கிணறு அமைந்துள்ள 13 செண்ட் சொத்தை தலா 6–1/2 செண்ட் என இரு பாகங்களாக பிரிக்க வேண்டுமென்று கூறினார்கள். அதற்கு வாதி ஒப்புக்கொள்ளாததால் கடந்த 10 நாட்களாக தாவா வண்டித்தடத்தை வாதி பயன்படுத்தி வருவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள். பெரியோர்களின் அறிவுரைகளையும் அவர்கள் ஏற்கவில்லை. மேலும் பிரதிவாதிகளின் நிலத்தின் கிழபுற எல்லை வரை தாவா வண்டித்தடத்தை துண்டித்துவிடுவதாகவும் கூறி வருகிறார்கள். அவ்வாறு செய்தால் வாதியும்

அவரது குடும்பத்தினரும் அவர்களின் சொத்துக்களுக்கு செல்வதற்கு வேறு வழி இல்லாமல் போய்விடும். பள்ளிக் குழந்தைகளும் அந்த வழியாக செல்ல இயலாது. மழை காலங்களில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் கிழக்கில் உள்ள மலையிலிருந்து வரும் மழை நீரும் வாதியின் நிலத்தை சேதப்படுத்திவிடும். பிரதிவாதிகள் தாவா வண்டித்தடம் மற்றும் ஓடையை துண்டிக்க எந்தவித உரிமையும் இல்லை. எனவே மேற்படி பரிகாரங்கள் கோரி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1<u>ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம் :</u> தாவாவில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதும் பொய்யானதும் ஆகும். அதை வாதியே நிரூபிக்க வேண்டியது. வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 1995ம் ஆண்டு தனது மூன்று மகன்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்பதும், மூத்த மகன் பழனிமுத்து 1985ம் ஆண்டே காலமாகிவிட்டார் என்பதும், வாதியின் தாயார் 2000ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்பதும், பழனிமுத்து வாரிசுகளும் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியும் 13.09.2001 அன்று பாகம் பிரித்துக் கொண்டதும் உண்மை. அதேபோல் பழனிமுத்துவின் வாரிசுகளுக்கு தனியாக கிணறு பம்புசெட் ஒதுக்கப்பட்டது என்பதும், வாதி மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு கூட்டு கிணறு, பம்புசெட் ஒதுக்கப்பட்டது என்பதும் உண்மை. அக்கூட்டு கிணறானது, கிழபுறமுள்ள வாதியின் நிலத்தில் 13 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது உண்மை. சர்வே எண் 172/1B-ல் 5 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள பொது வண்டித்தடம் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்பது உண்மை. ஆனால் அவ்வண்டித்தடமானது மழை காலங்களில் மழைநீரை வெளியேற்றும் ஓடையாக பயன்படுகிறது என்று சொல்லியுள்ளது பொய்யாகும். அவ்வண்டித்தடமானது வாதியின் நிலத்திற்கு செல்வதற்கு வேறு வழி இல்லாததால் அதன் வழியாக செல்வதற்கு

.. 5 ...

ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளதும் பொய்யாகும். அது வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் மட்டுமே பாத்தியப்பட்டது என்பதும் வேறு யாருக்கும் பாத்தியப்பட்டதல்ல என்பதும் உண்மையாகும். 2010ம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து மேற்படி வண்டித்தடத்தை வாதி பயன்படுத்தி வருவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதாக கூறியுள்ளது பொய்யாகும். 13 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள கூட்டு கிணற்றை இரண்டு பாகமாக பிரிக்க வேண்டுமென்று பிரதிவாதிகள் கேட்டதாக வாதி கூறியுள்ளது பொய்யாகும். உண்மையில் 13 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள கூட்டு கிணறு சம்பந்தப்பட்ட இடம் முழுவதையும் வாதியே முழுமையாக பயன்படுத்தி வருகிறார். அக்கூட்டு கிணறானது வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலத்தில் அமைந்துள்ளது. எனவே அதை அவர் எந்தவித இடையூறுமின்றி அனுபவித்து வருகிறார். ஆனால் பிரதிவாதிகள் அதை பயன்படுத்துவதற்கு வாதி இடையூறு செய்து வருகிறார். பொது வண்டித்தடத்தை வாதி பயன்படுத்துவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதாக கூறியுள்ளது பொய்யாகும். கூட்டு கிணறு அமைந்துள்ள 13 செண்ட் நிலம் முழுவதையும் வாதியே அனுபவித்து வருவது உள்ளூர் மக்கள் அனைவருக்கும் தெரியும். 1ம் பிரதிவாதியின் பாகத்தையும் சேர்த்து அபகரிக்க வேண்டியும், 1ம் பிரதிவாதியின் பாக நிலத்திற்கு கிணற்று நீர் PVC பைப் மூலமாக செல்வதற்கு அமைத்துள்ள வழியை இடையூறு செய்யவும் வாதி முயற்சித்து வருகிறார். அவ்வழி உரிமை பாகப்பிரிவினை பத்திரத்திலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வழியை பயன்படுத்தி வருவதற்கு வாதி தான் இடையூறு செய்து வருகிறார். கூட்டு கிணற்றை பயன்படுத்தவும் அக்கூட்டு கிணறு அமைந்துள்ள பொது இடத்திலுள்ள வழியை பயன்படுத்தவும் பிரதிவாதிகளுக்கு வாதி தான் இடையூறு செய்து வருகிறார். மேலும் பிரதிவாதிகளின் நிலம் வரை பொது வண்டித்தடத்தை துண்டித்துவிடும் எண்ணம் எதுவும் பிரதிவாதிகளுக்கு இல்லை. அது வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள கற்பனையான சங்கதிகளாகும். 13 செண்ட் பரப்பிலுள்ள கூட்டு

கிணறு வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்பதால் அதை வாதி மட்டுமே அபகரித்துக்கொண்டு அனுபவித்து வர இயலாது. உண்மையில் பொது வண்டித்தடத்தையும் கூட்டு கிணற்றையும் பிரதிவாதிகள் பயன்படுத்துவதற்கு வாதி தான் இடையூறு செய்து வருகிறார். தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. **<u>வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரையின் சுருக்கம் :</u>** பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் வாதி கூட்டு கிணறு அமைந்துள்ள பாகத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் வாதியின் நிலத்துடன் இணைத்துக் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். வாதியானவர் படிப்பறிவு இல்லாதவர். அவர் அவரது பாக நிலத்தை அனுபவித்து வருகிறார். கூட்டு கிணறு அமைந்துள்ள பாகத்தை ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலமே வாதிக்கு போதுமானதாகும். உண்மையில் கூட்டு கிணறானது 3 செண்ட் விஸ்தீரணத்தில் மட்டுமே அமைந்துள்ளது. ஆனால் எழுத்துப் பிழையின் காரணமாக பத்திரம் எழுதும்போது 13 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுவிட்டது. அந்த விவரம் நிலத்தை அளக்கும்போது தெரிய வந்தது. வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட ஏக்கர் 1.75 செண்ட் சொத்துக்களை தவிர வேறு சொத்து எதுவும் வாதிக்கு அவசியம் இல்லை. பிரதிவாதிகள் தவறான சங்களை பதிலுரையில் கூறியுள்ளார்கள்.

5. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் பதிலுரையை ஆராய்ந்து கடந்த 22.01.2020 அன்று கீழ்க்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiff has cause of action to file the suit? |
| 2. | Whether the Plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for? |
| 3. | To what other relief? |

6. வாதி தரப்பில், வாதி திரு. ஆனைமுத்து என்பவர் தனது வழக்குரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, தன்னை வா.சா.1–ஆக விசாரித்துக் கொண்டு சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக, திரு. நேரு என்பவர் வா.சா.2–ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 மற்றும் 6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் வாதியான வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 20.03.2020 முதல் 30.11.2020 வரை இவ்வழக்கு அழைக்கப்பட்டும் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே கடந்த 30.11.2020 அன்று வா.சா.1–ன் சாட்சியம் முடிக்கப்பட்டது. அதன் பின்னிட்டு நேரு என்பவர் வா.சா.2–ஆக வாதி தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2–யும் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே வா.சா.2–ன் சாட்சியமும் முடிக்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சிம் முடிக்கப்பட்டதாக மேற்குறிப்பு செய்யப்பட்ட பிறகு கடந்த 08.03.2021 முதல் 12.08.2021 வரை இவ்வழக்கு அழைக்கப்பட்டும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமோ ஆவண சாட்சியமோ முன்னிடப்படவில்லை. எனவே கடந்த 12.08.2021 அன்று பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டனர்.

8. வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள், சாட்சியங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்தானது, சுமார் 5 செண்ட் வீஸ்தீரணத்தில் அமைந்துள்ள பொது வண்டித்தடம் என்றும் அவ்வண்டித்

தடத்தை வாதியும் 1ம் பிரதிவாதியும் பயன்படுத்தும் உரிமை குறித்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றும், அதை பிரதிவாதிகளும் அவர்களது பதிலுரையில் ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும், அவ்வாறு ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தாவா வண்டித்தடத்தை பயன்படுத்தும் உரிமையை தடை செய்வதற்கு பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லையென்றும் வாதி இவ்வழக்கை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் மூலம் நிரூபித்துள்ளார் என்றும், அச்சாட்சியத்தை மறுத்து குறுக்கு விசாரணை செய்யவும், பிரதிவாதிகளின் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளை குறித்து சாட்சியமளிக்கவும் பிரதிவாதிகள் முன்வரவில்லை என்றும், எனவே வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டுமென்றும் வாதிட்டார்.

10. **<u>எழுவினா 1 மற்றும் 2-க்கான தீர்வு :</u>** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள், சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆத்தூர் வட்டம், சொக்கநாதபுரம் கிராம சர்வே எண் 172/1B-ல் ஏக்கர் 0.05 செண்ட் விஸ்தீரணத்தில் வா.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தில் சிவப்பு வண்ண நிறத்தில் காட்டப்பட்டுள்ள A-B-C-D- என்னும் பகுதிகளுக்குள் அமைந்துள்ள பொது வண்டித்தடம் தான் இவ்வழக்கு சொத்தாகும். மேற்படி பொது வண்டித்தடத்தினை பயன்படுத்தும் உரிமை வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உள்ளதை, வா.சா.ஆ.1-ஆன 13.09.2001 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பொதுஷரா மூலம் அறிய முடிகின்றது. வா.சா.ஆ.1 பாகப்பரிவினை பத்திரத்திலுள்ள பொது ஷராவில், ***"பி, சி பாகஸ்தர்கள் அவர்களின் நிலங்களுக்கு வடபுறத்தில் அவர்களால் ஒதுக்கப்பட்டுள்ள தடத்திலும், கிணர் பாகத்திற்கு செல்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தடத்திலும், பி, சி பாகஸ்தர்கள் அவரவர் வாரிசுகள் சகிதம் தட பாத்தியமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது'*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பொது ஷராவில் உள்ள வண்டித்தடம் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்பதை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையிலும்

ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தாவா பொது வண்டித்தடத்தை வாதி பயன்படுத்தும் உரிமையை தடை செய்ய பிரதிவாதிகளுக்கோ அவர்களது ஆட்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

11. தாவா பொது வண்டித்தடத்தை வாதி பயன்படுத்தி வருவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் வாதி மல்லியகரை காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும் அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது தாக்கல் செய்யப்படுள்ளதாகவும் வாதி தரப்பில் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நிரூபிக்கும் வகையில் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 புகார் மனு ஏற்பு சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.6–ஆன தாவா மாதிரி வரைபடத்தில் A–B–C–D என்று குறிப்பிட்டுள்ள தாவா சொத்தான பொது வண்டித்தடமானது வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டுள்ள நிலையில், அதை பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையிலும் ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், அதை பயன்படுத்துவதற்கு இடையூறு செய்து வருகிறார்கள் என்று சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்து மறுக்க பிரதிவாதிகள் முன்வராத நிலையிலும், வாதி தாவா வண்டித்தடத்தை பயன்படுத்தி வருவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்து வந்ததை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருத வேண்டியுள்ளதால் வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் பெறத்தக்கவர் என்று முடிவு செய்ய வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமைந்துள்ளது. அந்த வகையில் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிக்கு வழக்கு மூலமும் ஏற்பட்டுள்ளது. எனவே தாவாவில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்து எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகின்றது.

12. **<u>எழுவினா 3 க்கான தீர்வு :</u>** எழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கு காணப்பட்ட தீர்வின் அடிப்படையில், தரப்பினர்கள் பெறத்தக்க இதர பரிகாரங்கள்

.. 10 ...

எதுவும் இல்லையென்றும், தரப்பினர்களின் உறவு நிலையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்து எழுவினா 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது. முடிவில், தாவா சொத்தான பொது வண்டித்தடத்தை வாதியும், அவரது குடும்பத்தினரும் பயன்படுத்தி வருவதற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, யாரும் எந்த வகையிலும் தாவா பொது வண்டித்தடத்தை துண்டிக்கவோ அல்லது அடைத்துவிடவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2021–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 6–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/–. G. யுவராஜ்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**<u>பிற்சேர்க்கை :</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>**

வா.சா.1 திரு. ஆனைமுத்து (வாதி)

வா.சா.2 திரு. நேரு

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 13.09.2001 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 01.02.2012 தேதியிட்ட கந்தாய ரசீது |
| வா.சா.ஆ.3 | பட்டா எண் 73–ன் கணிணி பட்டா |
| வா.சா.ஆ.4 | 04.01.2010 அன்று மல்லியகரை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது எண் 2/2010 |
| வா.சா.ஆ.5 | 07.01.2011 அன்று மல்லியகரை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது எண் 5/2011 |
| வா.சா.ஆ.6 | தாவா சொத்தின் மாதிரி வரைபடம் |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**நீதிமன்ற சாட்சிகள் :** இல்லை

**நீதிமன்ற சான்றாவணங்கள் :** இல்லை

**(Sd/–. G. யுவராஜ்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

அ.வ. எண் 5/2016

அசல் / வரைவு தீர்ப்புரை,

நாள் 06.09.2021

**<u>அசல் வழக்கு எண் 5/2016</u>**

**<u>நாள் : 06.09.2021.</u>** தீர்ப்புரை பகரப்பட்டது. இறுதியாக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது. முடிவில், தாவா சொத்தான பொது வண்டித்தடத்தை வாதியும், அவரது குடும்பத்தினரும் பயன்படுத்தி வருவதற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, யாரும் எந்த வகையிலும் தாவா பொது வண்டித்தடத்தை துண்டிக்கவோ அல்லது அடைத்து விடவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

**மு.மா.உ.நீ.**